1978 செப்டம்பர் 1]

இப்போது இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கீழ் வந்ததற்குப் பின்னால் அந்தச் சாமியாருக்கு ஏதாவது கோவிலில் பொறுப்பு இருக்கிறதா அல்லது பொறுப்பு எதுவும் இல்லாமல் இருக்கிறார்களா? இந்தச் சாமியாரிடம் பொறுப்பு எதுவும் தராமல் இருந்தால்—அங்கே சாமியார் இல்லாவிட்டால் மீண்டும் வருமானம் இல்லாமல் போய்விடும் என்பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 1968 மார்ச் திங்கள் இந்தச் சாமியார் அவர்கள் இந்தக் கோவிலில் வந்து தங்கிய பிறகு காணிக்கைகள் மூலமாகவும், அர்ச்சனைக் கட்டணம் என்ற பெயரிலும் பெரிய வருமானம் கிடைத்திருக்கிறது. ஆனால், 1976 மார்ச் இறுதியில் இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கிறது. ஆனால், இப்போது அங்கு நடைபெறுகின்ற திருப்பணி போன்ற வேலைகளுக்கு சாமியார் தலைமையின் கீழ் குழு அமைக்கப்பட்டு, அவருடைய பொறுப்பில்தான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, இந்தக் கோவிலின் நிர்வாகப் பொறுப்பு அறநிலையத் துறையின் கீழ் வந்ததின் காரணத்தால், இப்போது நடைபெற்று வருகின்ற நிர்வாகத்திற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யானைகள் சரணாலயம்

* வினா 24—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானைகளுக்கு என்று தனியாக உய்விடம் ஏதாவது இம்மாநிலத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: தமிழ்நாட்டில் ஓசூர், முதுமலை போன்ற இடங்களில் யானைகள் அதிகமாக இருந்தும், அவைகளுக்குத் தனியாக உய்விடங்கள் எதுவும் இல்லாமல்

இருக்கின்றது. ஆகவே அங்கெல்லாம் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா? அதோடு மேலும் காடுகளில் யானைகளை பெருக்குவதற்கு அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் (1972 ஆம் ஆண்டு) ஒன்றும் ஷெட்யூலில் கண்டுள்ளபடி யானைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. யானைகள் எந்தப் பகுதியில் இருந்தாலும் பாதுகாப்புக்கு உட்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, யானைகளுக்கு இப்போது சரணாலயம் எதுவும் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? மேலும் இப்படிப்பட்ட சரணாலயத்தின் எல்லைகளுக்கு உட்படாத இடங்களிலுள்ள யானைகள் பக்கத்திலுள்ள கிராமங்களில் சென்று அட்டகாசங்கள் செய்து வருவதால், விவசாயிகளுடைய விவசாயம் பாதிக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, இப்படிப்பட்ட யானைகளை கட்டுப்படுத்த அரசு ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இங்குள்ள கேள்வி யானைகளுக்குச் சரணாலயம் அமைத்து யானைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பது. ஆனால், யானைகளினால் ஏற்படுகின்ற தொல்லைகளைப் பற்றி இங்கு சொல்லுகிறார்கள். ஆகவே, தொல்லைகள் எந்த மிருகங்களால் ஏற்பட்டாலும் மக்களுடைய சொத்துக்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு அரசு முயன்று இயன்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

பணி நிரந்தரமாக்கப்படாமல் உள்ள ஆசிரியர்கள்

* வினா 25—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—4—1970-க்குப் பின் வேலையில் அமர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளவர்கள் எத்தனை பேர்?